# தூத்துக்குடி மாநகராட்சி

## கூட்டப்பொருள்

2018ஆம் ஆண்டு ஜூன் மாதம் 07 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| | | |
|---|---|---|
| 07.06.2018 | 1) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் பொது நிதி திட்ட நிதியில் பொறியியல் பிரிவு மற்றும் பொது சுகாதாரப்பிரிவு வாகனங்களுக்கு இணையதள மென்பொருள் மூலம் மின்னனு சாதனங்கள் பொருத்தி வாடகை அடிப்படையில் மூன்றாண்டுகளுக்கு பராமரிப்பு செய்யும் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.25,00,000/—க்கு பணிக்கு 21.05.2018 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டது.<br><br>1. திரு. M/S.J. Technologies<br>மதிப்பீட்டை விட 9.90% குறைவு (ரூ.1899400.00)<br>2. திரு. M/S Real Tech System,<br>மதிப்பீட்டை விட 9.72% அதிகம் (ரூ.1903000.00)<br><br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீடு கொடுத்துள்ள திரு. M/S.J. Technologiesஅவர்களின் (மதிப்பீட்டை விட 9.90% குறைவு (ரூ.1899400.00)) ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :**<br>1. பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மதிப்பீட்டை விட 9.90% குறைவாக கொடுத்த திரு. M/S.J. Technologies ஒப்பந்ததாரர்க்கு வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்..<br><br>இ1/01475/2018 | 94) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக் கப்பட்டது. |
| | 2) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 12503/2018 ஆர் நாள் 21.05.2018ல் தொழில் வரி விதிகள் 1999ன் படி 1.10.98 முதல் அமல்படுத்தப்பட்டு இதன்படி 01.10.98 முதல் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மாமன்ற ஒப்புதலுடன் தொழில் வரியானது 25 % குறையாமலும் அதே வேளையில் அதிகபட்ச 35% மேல் கூடுதலாக உயர்வு செய்தல் கூடாது எனவும் அறிவுறுத்தப்பட்டது. இதன்படி செயல்பட அறிவுறுத்தப்பட்டது. இதன்படி தொழில் வரி நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்படுகிறது. | 95) அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | இந்நிலையில் மேற்படி சுற்றறிக்கையில் இந்திய அரசியல் சட்டம் பிரிவு கூறு 276 பிரிவு (2)ன் படி எந்த ஒரு நபரும் மாநிலத்திற்கோ அல்லது உள்ளாட்சி நிறுவனத்திற்கான தொழில் தொடர்பான வரி, வணிகம் வேலைவாய்ப்பு, உள்ளிட்டவைகளுக்கு செலுத்தும் சமயம் அத்தொகையானது ஆண்டு ஒன்றுக்கு ரூ 2500/–க்கு மிகைப்படாமல் இருத்தல் வேண்டும் என அரசியல் அமைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதால் இதற்கு அதிகமாக தொழில் வரி நிர்ணயம் செய்தல் கூடாது என்பதால் 01.10.2018 முதல் (2018–19ம் இரண்டாம் அரையாண்டு முதல்) தொழில்வரியினை மறு நிர்ணயம் செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br><br>எனவே ஏற்கெனவே உள்ள தொழில் வரியில் 01.10.2018ம் இரண்டாம் அரையாண்டு முதல் 35% உயர்வு அல்லது அதிகபட்சமாக ரூ. 2,500/– என தொழில் வரி நிர்ணயம் செய்திட ஏதுவாக மாமன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br>ஏற்கனவே உள்ள தொழில் வரியில் 1.10.2018 முதல் 35% கூடுதலாக மறு நிர்ணயம் செய்திடவும் அதே வேளையில் ரூ. 2,500/–க்கு மிகைப்படாமல் கட்டுப்படுத்தியும் தொழில் வரி நிர்ணயம் செய்து வசூல் செய்திட மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>ந.க.எண். 2136/2018/அ1 | |

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி

நாள் 07.06.2018